செ.வெ.எண்:187

ந.க.1451/2020/எக்ஸ்-2

நாள்:17.03.2020

நாள். 17.03.2020

## பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக 17.03.2020 முதல் 31.03.2020 வரை டாஸ்மாக் மதுபானக்கூடங்கள்(பார்கள்) மற்றும் FL2/FL3 மதுக்கூடங்கள் FL3A/FL3AA மதுபான உரிமத்தலங்களை மூடப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் (பார்கள்) மற்றும் FL2/FL3 மதுக்கூடங்கள் FL3A/FL3AA மதுபான உரிமத்தலங்களை கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக 17.03.2020 முதல் 31.03.2020 வரை கட்டாயமாக மூடப்பட வேண்டும் என டாஸ்மாக் மாவட்ட மேலாளர் மற்றும் அனைத்து FL2/FL3/FL3A/FL3AA உரிமதாரர்கள் ஆகியோர்களுக்கு இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. மேற்படி உத்தரவினை மீறி செயல்படும் அனைத்து டாஸ்மாக் சில்லறை விற்பனை கடைகளுடன் இணைந்த மதுக்கூடங்கள் (பார்கள்) மற்றும் FL2/ FL3 / FL3A / FL3AA ஆகிய உரிமதாரர்களின் மீது உரிம விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/- ம.கோவிந்த ராவ்,<br>
மாவட்ட ஆட்சியர்,<br>
தஞ்சாவூர்

/ஆணைப்படி/

17.3.2020

மாவட்ட ஆட்சியருக்காக,<br>
தஞ்சாவூர்

17.3.2020